REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5| சென்னை: புரட்டாசி 12உ சனி (28—9—57) ★ வெளியூர்: புரட்டாசி 13உ ஞாயிறு (29—9—57) [இதழ்: 91

## அந்த வாழ்வு அங்கே!

★

பம்பாய், செப். 27—

அமெரிக்காவில், 70 சதவிகித விவசாயிகள் சொந்த நிலம் உள்ள வர்களாம்; அவர்கள் தங்கள் நிலத்திலேயே பயிரிடுகின்றனராம்.

அமெரிக்காவில் 80 சதவிகிதக் குடும்பத்தினர் சொந்த வீடுகளில் குடியிருக்கின்றனராம்.

# 'வடவர் ஆதிக்கம் வலுப்பெறவே இந்தி பயன்படும்'

## 'ஆங்கிலம் அன்னிய மொழி என்றால் சமஸ்கிருதமும் — சவமொழியும்அன்னியமொழிதானே?'

## 'அன்று இந்தி வேண்டுமென்றோரும் இன்று எதிர்ப்பது எதனல்?'

### இந்திஎதிர்ப்புமாநாட்டில்பொதுச்செயலாளர் முழக்கம்

கடந்த 21—9—57-ல், திருவண்ணமலையில் நடந்த வ. ஆ. மாவட்ட இந்தி எதிர்ப்பு மாநாட்டில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரையின் தொடர்ச்சி:—

"அகில உலகத்திலிருக்கின்ற பல்வேறு நாடுகள், தங்களுடைய தாய்மொழியோடு, அகில உலகத்தோடு தொடர்புகொள்ள ஒரு மொழி தேவை என்று எண்ணின; அந்த எண்ணம் சென்ற 50 ஆண்டுக்காலமாக வளர்ந்து வளர்ந்து, இன்றைக்கு அகில உலகப் பொது மொழியாக ஆங்கிலம் விளங்குகிறது.

"அகில உலக வாணிபத் தொடர்பை ஏற்படுத்துகிற மொழி ஆங்கிலமாக இருக்கிறது. உலகத்தில் வளர்கின்ற விஞ்ஞானத்தைத் தன்னிடத்தில் அடக்கிக்கொண்டு அகில உலகத்துக்கும் பரப்புகின்ற மொழியாக இன்றைக்கு வளர்ந்து ஓங்கி, ஓங்கு புகழ் எய்தி நிற்கிற மொழி ஆங்கிலமாகும்.

"இந்தச் சூழ்நிலையிலே தான், இந்திய யூனியனுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற இந்திய சர்க்கார், இந்திய யூனியன் ஆட்சிப் பொறுப்பு 1947-வது ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ந் தேதியிலிருந்து தங்கள் கைக்கு வந்திருக்கிறது என்ற காரணத்தால்—வடவருடைய ஆதிக்கம் நிறைந்த காங்கிரசின் கையில் வந்திருக்கிறது என்ற காரணத்தினால், இந்தி மொழி இந்தியாவினுடைய பொதுமொழியாக ஆக வேண்டுமென்றும், தங்களுடைய ஆதிக்க மொழி—தங்களுடைய தாய் மொழி இந்தியா முழுவதற்கும் அரசியல் மொழியாகஆக வேண்டும் என்ற கருத்தில் 'இந்தியா முழுவதற்கும் ஒரு மொழி தேவை; இந்திய யூனியனுக்கு ஒரு மொழி தேவை; அந்த மொழி இந்தி' என்கிற முறையிலே புகுத்தும்பொழுதுதான், அந்த இந்தி நமக்கு இம்மியளவும் தேவையில்லை என்று வற்புறுத்தக்கூடிய நிலையிலிருக்கிறோம்.

"இன்றைய நிலையில் நாம் பார்ப்போமேயானால், நம்முடைய தாய்மொழியான தமிழ்— அதைப் போல் ஒவ்வொரு பகுதியிலுள்ள அதனதன் தாய்மொழி அந்தந்தப் பகுதிக்குப் போதும்; தாய் மொழி நிறைவேற்றித்தராத பண்புகளுக்கு, அதனை நிறைவேற்றித்தரும் ஒரு மொழி தேவை என்று சொல்லும பொழுது, அந்த மொழி இந்தி மொழியா என்று பார்க்கும் பொழுதுதான், அது, 'அல்ல' என்கிறோம்.

"இன்றையச் சூழ்நிலையைத் தொடர்புபடுத்துகிற மொழி இந்தியாக இருந்து—அகில உலக விஞ்ஞானக் கருத்தைப் பரப்புகிற மொழி இந்தியாக இருந்து, அகில உலக வாணிபத் தொடர்பை ஏற்படுத்துகிற மொழி இந்தியாக இருக்குமானால் நாம் தாய்மொழியோடு இந்தியை ஏற்றுக்கொள்வதிலே தகராறு ஒன்றுமிருக்காது.

"எந்தெந்தப் பண்புகளைத் தமிழ் நிறைவேற்றாது என்று கருதுகிறோமோ, அந்தப் பண்பை நிறைவேற்றுவதற்குரிய முழுப் பண்புகளும, இன்றைக்கு இந்தி மொழியில் அமைந்திருக்கிறதா என்றால், இல்லை!

"இந்தி மொழியினுடைய தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் அதைப் பரப்பிவரும் அருமைக் காங்கிரஸ் நண்பர்கள் கூறுகின்ற கருத்துக்களெல்லாம் —வட நாட்டோடு தொடர்பு கொள்வதற்கும், இந்தியா ஒன்றாக ஆவதற்கும், இந்தியாவில் ஒற்றுமையை வளர்ப்பதற்கும், இந்தியா ஒன்று என்று காண்பிப்பதற்கும், பெரும்பாலான மக்களால் பேசப்படுறது என்ற காரணத்தினலும் அந்த இந்தி மொழி இந்தியாவினுடைய பொது மொழியாகவும், தேசிய மொழியாகவும் இருந்துதீரும் என்கின்ற முறையிலே எடுத்துக் கூறுகிறார்கள்.

"நாம் கவனிக்குமிடத்து நம்முடைய தாய் மொழியோடு இந்தியை நாம் பயில்வதனல், இம்மியளவு நன்மை ஏற்படுகின்றதா என்றால் இல்லை.

"வடநாட்டு ஆதிக்கத்தை அகில இந்திய ரீதியில் நிலைநாட்டுவதற்குப். பயன்படுகின்ற ஒரு மொழியாக இருக்கின்ற காரணத்தினல்தான், அந்த இந்தியை எதிர்த்து, அது அறவே வேண்டாமென்று சொல்லித்தீர வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். நாம் மட்டுமல்ல அந்த உணர்ச்சியிலிருப்பவர்கள் — வங்காளிகளும் அதே உணர்ச்சியிலேதானிருக்கிறார்கள்.

"வங்காளிகள் கூறுகிறார்கள்- 'எங்கள் தாய் மொழியுடன் அகில உலகத் தொடர்பு மொழியான ஆங்கிலம் மட்டும் இருந்தால் போதும்; இந்தி மொழி ஆதிக்கம் கூடாது'—என்று!

"இந்தி மொழியை இந்தியாவினுடைய பொது மொழியாகவும் தேசிய மொழியாகவும் பரப்புகின்ற தன்மை, அகில இந்திய தேசியத்தையும், அகில இந்திய ஆதிக்கத்தையும் வடநாட்டார் கையில் ஒப்படைப்பதற்குப் பயன்படுமே தவிர, இந்த நாட்டு மொழி, கலாச்சாரம், பண்பாட்டை வளர்க்க உதவுகின்ற ஒன்று அல்ல என்ற கருத்தை நாம் வற்புறுத்திவருகின்றோம். இந்தக் கருத்தை ஆரம்பத்தில் எதிர்த்தவர்களெல்லாம் ஓரளவு இன்று உணர்ந்துவருவதை நாம் அறிகிறோம்.

"இதுவரையில் இந்தியை எதிர்க்கத் துணிவு கொள்ளாதவர்களெல்லாம் இன்று துணிவு கொள்கிற அளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கிறது. தென்னாட்டிலிருந்து சென்றுள்ள காங்கிரஸ் எம். பி.-க்கள் உட்பட—காங்கிரஸ்காரர்களே, '1990 ஆண்டுவரை இந்தித் திணிப்பைத் தள்ளி வைக்க வேண்டும்' என்று கேட்டுக்கொள்கிற நிலை ஏற்பட்டுள்ளது.

"இந்திக்காகச் செலவழிக்கின்ற நேரமும் நினைப்பும், வரிப் பணமும் பொருளும் வீண் என்பதை வற்புறுத்தித் தீர வேண்டிய நிலையிலிருக்கிறோம்; திராவிட மக்கள் அகில உலகோடு தொடர்பு கொள்ளத் தங்கள் தாய் மொழியுடன் ஆங்கிலம் ஒன்று கற்றால் போதும்.

"இந்த நாட்டை வெள்ளையர்கள் அடிமைப்படுத்தியகாலத்தில், அவர்களால் புகுத்தப்பட்ட மொழி ஆங்கிலம் என்பதால், 'ஆங்கிலத்தை ஏற்கக்கூடாது' என்று காரணம் கூறி—'இந்தி பெரும்பாலான மக்களால் பேசப்படுகிறது' என்று கூறி, இந்தியைக் கொண்டுவந்து புகுத்துகிறார்கள். இந்தி எவ்வளவு பேரால் பேசப்படுகிறது? தப்புந் தவறுமாக அவர்கள் கொடுத்திருக்கின்ற கணக்குப்படி பார்த்தாலும்கூட, 'இந்தி 42 சதவிகித மக்களால்தான் பேசப்படுகிறது' என்று, மொழி பற்றித் தயாரிக்கப்பட்டிருக்கின்ற அறிக்கை கூறு

(4-ம் பக்கம் பார்க்க)

## குறைகளை அறிவிக்க வந்த 500 நெசவாளர்மீது தடியடிப்பிரயோகம்

### நேரில் சந்தித்து குறைகளைக் கேட்டறிய முதலமைச்சருக்கு நேரமில்லையாம்!

பெங்களூர், செப். 28—

மக்களின் நலனுக்காக மக்கள் ஆட்சி நிலவுவதாகக் கூறப்படும் காங்கிரசின் புரட்டுக்கு ஆதாரம் தேடும் வகையில் பெங்களூரில் ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது.

பட்டுத் தொழிலுக்குச் சிறப்பிடம் வகித்துவரும் மைசூர் மாநிலத்தில், பட்டு நெசவுத் தொழிலாளர்கள், தங்கள் குறைகளை மாநில முதலமைச்சருக்கு அறிவித்து தக்க பரிகாரம் தேடுவதற்கு முனைந்தனராம்.

மனித சமுதாயத்திற்கு அழகிய பட்டாடை தயாரித்துத்தரும் இந்த நெசவாளருக்குத் தரப்படும் கூலி மிகக் குறைவு என்றும் அதைக்கொண்டு விலைவாசிகள் அதிகரித்துள்ள இந்தக் காலத்தில் வாழமுடியவில்லையே என்ற அவல நிலையை அமைச்சர்களிடம் அறிவிக்கவும் அவர்கள் முனைந்தனராம்.

பட்டுத் தொழிலை நடத்திடும் அதிபர்கள் நெசவாளர்களின் குறைகளுக்குச் செவிசாய்த்து அவர்கள் நல்வாழ்வு வாழவும், நல்வழி காணுவதற்கும் முன் வராத காரணத்தால், பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் பிரச்சினையைத் தீர்க்க ஒரு தனி நீதிமன்றம் (டிரிபியூனல்) அமைக்க வேண்டும் என்று முதலமைச்சரிடம் தெரிவிக்க வந்தனராம்.

அப்போது மைசூர் மாநில சட்ட மன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்ததாம்; எனவே, நெசவாளர்களை உள்ளே செல்ல அனுமதிக்க மறுத்துவிட்டனராம். இதனல் நிலைமை மோசமாகி, போலீசார் தடியடி பிரயோகித்து அவர்களைக் கலைத்தனராம்.

வாழ வழிதேடுவதற்கு நம்பிக்கையுடன் வந்த நெசவாளர்கள் துரத்தியடிக்கப்பட்டுள்ளனர்— மக்கள் ஆட்சி நிலவிடும் மைசூர் மாநிலத்தில்!

பிறகு நெசவாளர்கள் சட்ட மன்றத்திற்கு எதிரே சாலையில் அமர்ந்துகொண்டு மாலைவரை மறியல் செய்தனராம்; பிறகு நெசவாளர்கள், தங்கள் வாழ்வில் இருள் சூழ்ந்திருப்பதை முதலமைச்சருக்கு அறிவிக்க ஊர்வலமாக அவர் இல்லம் நோக்கிச் சென்றனராம்.

மக்களிடம் வாக்கு பெற்று, பதவியில் முதலமைச்சராக அமர்ந்துள்ள அவர், வீட்டில் இருந்திருக்கிறார்; ஆனல் தன்னைக் காண வந்துள்ள மக்களைக் காணவும், அவர்களது குறைகளைக் கேட்கவும் அவருக்கு மனம் வரவில்லை; எனவே, அவர்களைக் காண மறுத்துவிட்டுள்ளார்!

அந்நேரம், அவர், ஐதராபாத் செல்ல வேண்டிய கட்டமாம்; அதற்கான வேலைகளில் ஈடுபட்டிருந்தாராம்; எனவே, நெசவாளரைக்காணமறுத்துவிட்டாராம்; ஐதராபாத்திலிருந்து திரும்பிய பின்னர்தான் பேட்டியளிக்க முடியும் என்று கூறிவிட்டாராம்

## கிருஷ்ணு, கோதாவரி நீர் தமிழ்நாட்டுக்குக் கிடைக்குமா?

### சென்னை அரசாங்கத்தின் வேண்டுகோள் ஏற்கப்படுமா?

ஆந்திர மாநிலத்திலுள்ள கிருஷ்ணு, கோதாவரி ஆகியவற்றின் உபரி தண்ணீர் சென்னை மாநிலத்திற்குக் கிடைக்கச் செய்வதற்கு வழிகோல வேண்டுமென்றும், இதைத் தென்மண்டலக் குழு ஆராய்ந்து ஆவன செய்ய வேண்டுமென்றும், சென்னை அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனல் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தரிசு நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும.

இதற்கான திட்டமும் தீட்டப்பட்டுள்ளது. கோதாவரியின் உபரி தண்ணீரை கிருஷ்ணு நதிக்குத் திருப்பி சென்னையை அடுத்துள்ள பெண்ணற்றில் விட வேண்டும் என்பதே தயாரிக்கப்பட்டுள்ள திட்டமாகும்.

இதற்கான முழுச் செலவை சென்னை அரசாங்கமே ஏற்கும் என்று தெரியவருகிறது.

## சென்னை-ஆந்திர எல்லைத் தகராறு

### காமராசர் காட்டும் அக்கறை!

ஐதராபாத், செப். 28—

சென்னை — ஆந்திர எல்லைத் தகராறைத் தீர்க்க இங்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. நேற்று மாலை இரு மாநிலங்களின் முதலமைச்சர்களும் இதுபற்றி விவாதித்துள்ளனர். படாஸ்கர் அறிவித்துள்ள தீர்ப்பின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று கருதப்படுகிறது.

பத்திரிகை நிருபர்கள் முதலமைச்சர்களைக் கண்டு வினவியுள்ளனர்.

இப்போதுள்ள நிலையையே நீடிப்பது, படாஸ்கர் தீர்ப்பை ஏற்பது, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் படாஸ்கர் தீர்ப்பில் சில மாற்றங்களுடன் முடிவு காண்பது என்ற மூன்று வழிகள் இருப்பதாக ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவரெட்டி தெரிவித்துள்ளார்.

மக்களின் விருப்பப்படி முடிவு காண வேண்டுமென்றும், அதுவே முடிவு கண்டபின்னர் கிளர்ச்சியை தடுக்கக்கூடிய சிறந்தவழி என்றும், சென்னை முதலமைச்சர் காமராசர் தெரிவித்துள்ளார்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 23—9—57 சனி

# மீண்டும் ஆபத்து?

கைத்தறித் துணிகளுக்கு இப்போது, 'செஸ்' நிதியிலிருந்து தரப்பட்டு வருகிற 'ரிபேட்' என்ற விற்பனைக் கழிவுத் தொகையை இனித் தரப்போவதில்லை, நிறுத்திவிடப் போகிறோம் என்ற ஒரு திடுக்கிடும் செய்தி, சர்க்காரால் வெளியிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்த விற்பனைக் கழிவு தரப்படுவதற்கு, கூறப்பட்டுவந்த காரணம் எல்லாம், கைத்தறி விற்பனைக்கு உதவுவது, அதாவது, கைத்தறிக்கு ஒரு கவர்ச்சி தருவது, கைத்தறி வாங்குமாறு மக்களை ஊக்குவிப்பதற்கு என்பதுதான். அப்படியிருக்க, இந்த 'ரிபேட்' தருவதை நிறுத்திவிடுவதினுல் ஏற்படக்கூடிய விளைவை சர்க்கார் எண்ணிப் பார்த்தனரா?

'ரிபேட்' தரப்படும் இந்த நாளிலேகூட, ஏராளமான துணி தேங்கிக் கிடப்பதாகவும், மீண்டும் கைத்தறியாளர் ஒரு பெரும் நெருக்கடிக்கு ஆளாக நேருமோ என்ற அச்சம் தலைதூக்கியிருப்பதாகவும், செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இந்தநிலையில், சர்க்கார் 'ரிபேட்' தருவதையும், நிறுத்திவிட்டால், கைத்தறித் துணி விற்பனை பெருமளவுக்குப் பாதிக்கப்படும் என்று எச்சரிப்பதற்கு இடம் இருக்கிறது.

'ரிபேட்' தருவதை நிறுத்துவதினுல், விற்பனை பாதிக்கப்படாது என்பதற்கு, காரண விளக்கங்களுடன் சர்க்கார், உறுதிமொழி எதுவும் தந்திருப்பதாகவும் தெரியவில்லை, 'விற்பனைக் கழிவு' தரப்படுவதினுலேயேதான் கைத்தறித் துணிக்கு 'மார்க்கெட்' கிடைக்கிறது என்று கூறப்பட முடியாது என்றாலும், இதனுல், விற்பனைக்கு ஊக்கம் கிடைக்கிறது என்பதை, சர்க்கார் தங்களது இந்த நடவடிக்கைக்கு நியாயந் தேடவேனும் ஒப்பித்தாகவேண்டும். இந்த நிலையில், 'விற்பனைக் கழிவு' நிறுத்தப்படுவதினுல் கைத்தறிக்கான மார்க்கட்டில் இறங்குமுகம் தலைதூக்காது என்று எப்படி சர்க்கார் உறுதியளிக்க முடியும்?

அல்லது, உள்நாட்டில், கைத்தறி விற்பனை, விற்பனைக் கழிவை நிறுத்திவிடுவதால் பாதிக்கப்பட்டாலும் பாதிக்கப்பட்ட அளவைச் சரிக்கட்டும்வண்ணம், கைத்தறிக்கு அன்னிய நாடுகளில் மார்க்கட்டுகள் விரிவாக்கப்பட்டிருக்கின்றன என்றுவது சர்க்கார் தெரிவிக்க முடியுமா? முடியாது என்று நாம் திட்டமாகச் சொல்லலாம். ஏனெனில், இந்த நாட்டுக் கைத்தறிக்கு, அன்னிய நாடுகளில் உள்ள 'கிராக்கி' ஏறியிருப்பதாகவோ, அதற்கான சர்க்காரின் முயற்சிகள் வெற்றிபெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளன என்றோ, உற்சாகம் ஊட்டக்கூடிய வகையில் தகவல்கள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை.

உள்நாட்டிலும், மகிழ்ச்சியூட்டத் தக்கதாயில்லாவிடினும் திருப்தி தரக்கூடியதாகக்கூட கைத்தறி விற்பனை இருக்கவில்லை, துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. வெளிநாடுகளிலிருந்தும் குறிப்பிடத்தக்க அளவு கோரிக்கைச்கு. வழி செய்யப்படவில்லை. இந்த நிலையில், கைத்தறித் துணிக்குத் தரப்பட்டுவரும், விற்பனைக் கழிவை நிறுத்திவிடுவது என்ற முடிவு அவ்வளவு விவேகமானதாகக் கருதப்படுவதற்கு இல்லை.

விற்பனைக் கழிவை நிறுத்திவிட்டு, அதனுல் மிச்சப்படக்கூடிய தொகையைக்கொண்டு, கைத்தறியாளருக்கு வீடுகட்டித் தருதல் போன்ற சில வாழ்க்கை வசதிகளைச் செய்து தரப்போவதாகவும் சர்க்கார் தெரிவிக்கிறது. இது உண்மையானுல், இந்த அறிவிப்பிலிருந்து கைத்தறியாளருக்கு, குடியிருப்பு போன்ற வசதிகள் செய்து தரப்படவேண்டியுள்ள அவசியத்தை சர்க்கார் உணர்ந்திருப்பதாகக் கருதலாம். ஆனுல் குடியிருப்பு வசதி செய்துதருவதற்காக, அவர்களது ஏற்கனவே ஊஞ்சலாடிக்கொண்டிருக்கும் தொழிலையே பாதிக்கக்கூடிய வகையில், முடிவு எடுப்பது ஆபத்தானதாகிவிடாதா? குடியிருப்பு வசதி செய்து தரவேண்டியுள்ள அவசியத்தை உணர்ந்துள்ள சர்க்கார், அதற்குத் தேவைப்படும் நிதியைப்பெற வேறு வழிகளைத் தேடியாக வேண்டுமே தவிர, கைத்தறிக்குத் தரப்படுகிற 'விற்பனைக் கழிவை' மிச்சப்படுத்துகிறவேலையில் ஈடுபடக்கூடாது என்றே நெசவாளர், கூறுவர்.

தொழிலுக்குப் பாதுகாப்புத் தேடித் தருவதுதான் பிரதான பிரச்சினை என்பதை நாம் இந்த நேரத்தில் வற்புறுத்தவேண்டியவர்களாயிருக்கிறேம்.

'ஆலைத் துணிக்கு செஸ் விதித்து அதிலிருந்து, கைத்தறிக்கு உதவுவது என்பது, கைத்தறிக்கு நிரந்தரமான பாதுகாப்புத் தருவதாக அமையவில்லை; அமையவும் முடியாது.

வேலைக்காரன் ஒருவன், தன் வீட்டு விசேஷங்களுக்கு, எஜமானிடமிருந்து பெறும்உதவித் தொகை போன்றது கைத்தறி, செஸ் நிதி உதவி பெறுவது. நாள் ஆக ஆக, கொடுப்பவருக்கும், வாங்குபவருக்கும் கூட மனக்கசப்பு வளரத்தான் செய்யும் என்று நமது அண்ணு அவர்கள், இரண்டு ஆண்டுகளுக்குமுன் கைத்தறி வார விழாக் கூட்டம் ஒன்றில் தெரிவித்த கருத்து, இப்போது வலுப்பெற்று வருவதைக் காண்கிறேம்.

எனவே, கைத்தறித் தொழிலுக்கு நிரந்தரமான பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது, சர்க்காரின் அவசிய அவசரமான கடமையாகும்.

கரைபோட்ட வேட்டி மற்றும் சேலைகளின் உற்பத்தியை கைத்தறிகளுக்கென்றே ஒதுக்கித் தரவேண்டும் என்ற நெசவாளர்களும், அவர்கள்பால் அனுதாபமும் அக்கறையும் கொண்டவர்கள் தெரிவித்து வற்புறுத்திவரும திட்டத்தை டெல்லி சர்க்கார் ஏற்கவேண்டும் என்று மீண்டும் வற்புறுத்துகிறேம். இந்த மாநில சர்க்கார், மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும், நெசவாளர்கள், ஒன்றுபட்டு தங்கள் கோரிக்கையை வலியுறுத்த வேண்டும் என்றும், கேட்டுக் கொள்கிறேம்.

## காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்துவிடுமே

### டி. டி. கே.-யின் சிந்தாகுலம்

வாஷிங்டன், செப். 27—

இந்தியாவின் இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்திற்கு 60 கோடி டாலர் கடன் தேட அமெரிக்கா வந்துள்ள இந்திய நிதி அமைச்சர் உலக பாங்கியின் நெறியாளர் கூட்டத்தில் பேசுகையில் இந்தியாவின் பொருளாதார நிலையையும், குறிக்கோள்களையும் தவக்கப்படுத்துவது பெரும் அரசியல் விளைவுகளையும், மாற்றங்களையும், சிக்கல்களையும் ஏற்படுத்தும்' என்று தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைத்தர உயர்வு இலட்சியத்தில் நிலைமை மோசமாக உருவாகியுள்ளது என்றும், அதனுல் விபரீதங்கள் ஏற்படக்கூடும் என்றும் அவர் புலம்பியுள்ளார்.

# காங்கிரஸ் கொள்கை காற்றில் பறக்கிறது!

## தேசீய உடைமையாக்கும் திட்டமில்லையாம்

வாஷிங்டன், செப். 27—

ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் பேரவையில் புதிய சோஷலிச சமுதாய அமைப்புக்கான திட்டங்களை மக்களுக்கு அறிவித்தும், பதவிக்கு வரும்முன் கொள்ளை இலாபம் குவித்திடும் தொழில்களை அரசாங்கமே ஏற்று நடத்தும் என்றும் மக்களிடம் கூறிய காங்கிரஸ், இன்று பதவியில் அமர்ந்ததும் கொள்கையை மாற்றிக்கொள்ளும் நிலைக்கு மாறியுள்ளது என்பது அமெரிக்காவில் 'வாஷிங்டன் போஸ்ட்' என்ற இதழின் நிருபருக்கு டி. டி. கே. அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ள கருத்துக்கள் தெளிவுபடுத்தும்.

'அரசாங்கம் எல்லா தொழிலையும் ஏற்று நடத்தும் கொள்கைக்கு இந்தியா மாறுபட்டது. இனி எந்தத் தொழிலையும் அரசாங்கம் ஏற்று நடத்துவதில்லை என்று முடிவு செய்துள்ளோம்' என்று தெரிவித்துள்ளார்.

## இரயில் எஞ்ஜின் டிரைவரின் தீரச்செயல்

### குடியரசுத் தலைவர் விருது

1956 ஜுலை 26-ந் தேதி சுமார் 400 பேர் ஏறிச்சென்ற ஒரு இரயில் (தென்கிழக்கு ரயில்வேயில்) காரச்பூர் அருகில் சென்றுகொண்டிருக்கையில் திடீரென எஞ்சின் நெருப்பு பெட்டிக் கதவு உடைந்து உள்ளே தீ பரவியது ஜோஹானெஸ் என்ற டிரைவருடன் இருந்த பயர்மென்கள் தீயில் காயம்பட்டு ஓடும் ரயிலிலிருந்து வெளியே குதித்துவிட்டார்கள். டிரைவர் ஜோஹானெஸ் தாமும் தீயில் காயப்பட்டபோதிலும் தாமும் குதித்துவிட்டால் பிரயாணிகளுக்குப் பெரும்ஆபத்து நேருமென்று உணர்ந்து தன்னைச்சுற்றி தீ தகித்தபோதிலும் காரக்பூர் ஸ்டேஷன் வரை ரயிலை ஓட்டிச் சென்று ஆபத்தில்லாமல் நிறுத்திவிட்டார் பிறகு கீழே இறங்கி ஊர்ந்துசென்று கார்டிடம் விஷயத்தைக்கூறினுர். ஆஸ்பத்திரிக்கு ஜோஹானெஸ் எடுத்துச்செல்லப்பட்டார் சில மணிநேரத்தில் அவர் உயிர் நீத்தார் அவரது இந்த வீரச்செயலுக்காக, மரணபிற்காலவிருதாக, குடியரசுத்தலைவர் அசோகசக்கர 2வதுபிரிவு விருது அளித்திருக்கிறுர்.

# '2-வது திட்டம் ஆகாயக் கோட்டை'

## இதைக் காட்டியே மக்களின் ஆதரவுபெற்றேம்

### அமைச்சர் டி. டி. கே. ஒப்பம்

வாஷிங்டன், செப். 27—

'இரண்டாவது 5 ஆண்டுத் திட்டம் பேராசையானதே. அந்தத் திட்டத்திற்கு மக்கள் நம்பிக்கை தெரிவித்து எங்களை தேர்ந்தெடுத்தார்கள்' என்று இந்தியப் பேராசு கட்ட இருக்கும் மனக்கோட்டைக்குக் கடன்தேட அமெரிக்கா வந்துள்ள இந்திய நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உள் நாட்டில் வரவு—செலவு ஈடு செய்ய அதிக வரியும் விதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இருமண்டலங்களில் மைசூர்!

ஐதராபாத், செப். 27—

மைசூர் மாநிலம் தற்போது மேற்கு மண்டலக் குழுவில் அங்கம் வகித்து வருகிறது.

இனி தென் மண்டலக் குழுவிலும் சேர்க்கப்படலாம் என்று தெரிய வருகிறது.

இவ்வாறு இரட்டை உறுப்பினர் நிலையை ஏற்படுத்த மாநில அமைப்பு சட்டத்தையும் திருத்துவதற்கான பணியில் இந்திய அரசாங்கம் முனைந்துள்ளதாம்.

இதற்குக் காரணம் மைசூர் மாநிலத்திற்கு சென்னை, பம்பாய் ஆந்திரா ஆகியவைகளுடன் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் உள்ளதேயாகும் என்று கூறப்படுகிறது.

## இந்தியக்குடியரசுக் கட்சி

நாகபுரி, செப். 26—

அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் அக்டோபர் 3-ம் தேதியுடன் கலைக்கப்படுகிறது. இதற்குப் பதிலாக 'இந்திய குடியரசுக் கட்சி' என்ற புதிய பெயருடன் ஒரு அரசியல் கட்சி இயங்கும் என்று தெரிய வருகிறது.

அக்டோபர் 2-ம் தேதி ஒரு மாநாடுகூட்டி எதிர்காலத்திட்டங்கள் பற்றி ஆராய்ந்து முடிவுகள் செய்யப்படுமாம்.

## இரயில்வேயில் சாமான் போக்குவரத்து

புதுடில்லி, செப். 26—

இரண்டாவது திட்டக் காலத்துக்குள் மேலும் 6 கோடி டன்களுக்கு இரயில்வேக்களில் சாமான் போக்குவரத்து வசதியை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் திட்டம் உருவாக்கப்பட்டு மேலும் ரூபாய் 100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

## ஐ. நா. செயலாளர் பதவி

நியூயார்க், செப். 27—

ஐ. நா. நிறுவனத்தின் செயலாளராக உள்ள திரு. ஆமர்சோல்டு தொடர்ந்து மேலும் 5 ஆண்டுகளுக்கு பதவியில் நீடிக்க வேண்டும் என்று ஒருமனதாக அனைவரும் முடிவு செய்துள்ளனர்.

# சிரியாவிற்கு சவூதிஅரேபியா ஆதரவு

## மேற்கு வல்லரசுகள் கவலைப்படுகின்றனவாம்

கெய்ரோ, செப், 26—

சிரியா விவகாரத்தில், அமெரிக்கா கடைப்பிடித்து வரும் கொள்கை காரணமாக அமெரிக்காவின் நிரந்தர நண்பர் எனக் கருதப்படும் சவூதி அரேபிய மன்னர் வருத்தமுற்றிருப்பதாகத் தெரியவருகிறது.

இப்போது, மன்னர் சாவூத் சிரியாவிற்கு வந்துள்ளார். அவர் சிரியக் குடியரசுத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறுர்.

இதற்கிடையில் சவூதி அரேபிய பிரதம மந்திரி பீர்எமிர் பெய்சல் என்பார், அண்மையில் வாஷிங்டன் சென்றிருந்தபோது அங்கு சிரியாவிற்கு, சவூதி அரேபியாவின் முழு ஆதரவும் உண்டு என்று பேசியிருப்பது, குறிப்பாக அமெரிக்காவிற்கும், பொதுவாக, மேற்கு நாடுகளுக்கும், கவலையைத் தந்திருக்கின்றதாம்.

## சேலம் நகரில் 1138 பிச்சைக்காரர்கள்

### கல்லூரி மாணவர்கள் தயாரித்த கணக்கு

சேலம், செப். 25—

சேலம் நகரில் மொத்தம் 1,138 பிச்சைக்காரர்கள் இருக்கிறுர்கள் என்ற புள்ளிவிவரத்தை சேலம் கல்லூரி மாணவர்கள் சேகரித்துள்ளார்கள். இந்தப் பிச்சைக்காரர்களில் 745 பேர் ஆண்கள். 393 பேர் பெண்கள், குழந்தைகள் 195 பேர்.

இந்தப்பிச்சைக்காரர்களில் குருடர்கள் 43 பேர், பெருவியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் 21 பேர். வேலை செய்ய சக்தி உடையவர்கள் 484 பேர்.

சேலம் நகரில் பிச்சைக்காரர் விடுதிகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-நி.)

## வேலை நிறுத்தம் சட்ட விரோதமானதாம்!

### தடையை முறியடிக்க முடிவு

புதுடில்லி, செப். 26—

வாழ்க்கைத்தர உயர்வுக்கு ஈடு செய்ய பஞ்சப்படியை அதிகரிக்க வேண்டும் என்ற வங்கி ஊழியர்களின் நியாயமான கோரிக்கையை அரசாங்கம் ஏற்க மறுத்த தன் விளைவாக, வங்கி ஊழியர்கள் கடந்த செப்டம்பர் 18-ம் நாள் முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பொருளாதார நிலை கெடுகிறது—வாணிபம் பாதிக்கப்படுகிறதே—துறைமுகங்களில் கப்பல்களில் இறக்குமதி ஏற்றுமதி வேலைகள் சரிவர நடைபெறவில்லையே, தொழிலாளர்களுக்கு வருமானம் குறைந்துவருகிறதே, என்று பல காரணங்களை உருவாக்கி, வங்கி ஊழியர்களின் வேலைநிறுத்தம் சட்டவிரோதமானது என்று மத்திய தொழில் அமைச்சர் இலாகா அறிவித்துள்ளதாம். வங்கி ஊழியர்களின் கோரிக்கையைக் கவனிக்க ஒரு தனி நீதிமன்றம் ஏற்பாடு செய்யப்படுமாம்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள வங்கி ஊழியர்கள் மீண்டும் வேலைக்கு திரும்பவேண்டுமென்று எச்சரித்து இந்திய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தத் தடை உத்தரவைப் பற்றி வங்கி ஊழியர் சங்கத் தலைவரிடம் வினவியபோது அவர் 'வேலைநிறுத்தம் கைவிடப்படமாட்டாது. தடையை மீறி தொடர்ந்து போராட்டம் நடைபெறும்' என்று நிருபர்களிடம் அறிவித்துள்ளார்.

# நெஞ்சுரம்கொண்ட வீரர்கள் பட்டியல் வளரட்டும்

## அதுவே ஆதிக்கக்காரர்களின் ஆணவத்தை அழித்து ஒழிக்கும்

### இந்திஎதிர்ப்பு மாநாட்டில் அண்ணு

திருவண்ணுமலையில் கடந்த 21—9—57-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அண்ணு அவர்கள் ஆற்றிய உரையின் தொடர்ச்சி:—

"இந்தி மொழியிலே வளமில்லையென்பதை நம்முடைய நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் சொன்ன நேரத்தில்—தமிழ் மொழியினுடைய வல்லமைகளையெல்லாம் நம்முடைய நண்பர்கள் எடுத்துச் சொன்ன நேரத்தில்—ஆங்கிலத்தைப்பற்றியும் எடுத்துச் சொன்னுர்கள்; ஆங்கிலம் இருந்தால் உலகத் தொடர்புக்குப் போதுமென்று. 'இந்தி மொழியினுலே உலகத் தொடர்பும் ஏற்படுத்திக் கொள்ளலாம்; மாநிலங்களுக்குள்ளே தொடர்பும் ஏற்படுத்திக் கொள்ளலாம்' என்று வாதாடுகின்ற பண்டித நேருவினுடைய பேரப்பிள்ளைகள் 'எங்கே படிக்கிருர்கள்?' என்று கேட்கிறேன். இன்றையத் தினம், இந்திப் பள்ளிக்கூடத்திலா படிக்கின்ருர்கள்?...இல்லை. சுவிட்சர்லாந்து நாட்டிலே படித்துக் கொண்டிருக்கின்ருர்கள். பெரிய பெரிய காங்கிரஸ் தலைவர்கள் நியாயப்படி பணம் கிடைத்தால் இங்கே படிக்கவைக்கின்ருர்கள். அநியாயத்திலே பணம் கிடைத்தால் உடனே பிள்ளைகளை அமெரிக்காவுக்கு அனுப்புகின்ருர்களே தவிர, இந்தி 'ராஷ்ட்ர பாஷா' பள்ளிக்கூடத்திலா படிக்கவைக்கின்ருர்கள்? அவரவர் ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கு எந்த மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமோ, அதற்கு உலகமெல்லாம் சுற்றி அலைகின்ருர்கள். நம்முடைய நாட்டு மக்களுடைய தலையிலேதான் இந்தியைத் திணிக்க வைக்கின்ருர்களே தவிர, அவர்கள் ஒன்றும் இந்தியிடத்திலே அவ்வளவு அக்கறை எடுத்திருக்கின்ருர்கள் என்று அர்த்தமல்ல. ஆகையினுலே இந்த மாநாட்டிலே நாம் தீர்மானித்துக் கொள்ள வேண்டியதும், நாம் திட்டம் தீட்டிக்கொள்ள வேண்டியதும் இந்தி மொழி அந்த முறையிலே புகுத்தப்பட்டால்—திணிக்கப்பட்டால் எந்தமுறையிலே அதை எதிர்க்கவேண்டும்? எந்தமுறையிலே அந்த இக்கட்டிலேயிருந்து விடுபடவேண்டும்? அப்படி விடுபடுகின்ற கிளர்ச்சி நடைபெறுகின்ற நேரத்தில் உங்களிலே எத்தனைபேர் ஈடுபாடுகொள்ள இருக்கிறீர்கள்? இன்றையத் தினம் சித்தமாக இருக்கின்றீர்கள்?—என்பதுதான்.

"மாநாட்டிலே உட்காருகின்ற நேரத்தில் ஆயிரம்பேர் சித்தமாயிருக்கலாம். மாநாடு கலைந்து வெளியே செல்லுகின்ற நேரத்தில் போலீஸ் ஸ்டேஷனைப் பார்த்தவுடன் ஆயிரம்பேரிலே ஐந்நூறுபேர் கலைந்து போகலாம்; இருநூறுபேரிலே போராட்டம் என்று வருகின்ற நேரத்தில் இருபதுபேர் மிஞ்சலாம்; மற்றவர் போய்விடக் கூடும்—அந்தக் கணக்கை நான் அறியாதவனல்ல.

"ஆகையினுலே அவசரப்பட்டு நீங்கள் முடிவெடுக்காதீர்கள்; ஆற அமர சிந்தித்துப்பாருங்கள் இந்திமொழியினுடைய ஆதிக்கத்தைத் தடுத்துத் தீரவேண்டுமென்ருல் எடுக்கக் கூடிய அறப் போராட்டம் எந்த அளவுகெல்லாம் செல்லக் கூடுமென்பதை நாட்டிலே இன்றையத்தினம் நடைபெறுகின்ற நானுவிதமான காரியங்களைப் படித்துப் பாருங்கள்.

"ஜாதிச் சண்டை நடக்கின்றது, தெற்கே ஒரு மாவட்டத்தில்—இவ்வளவு வல்லமை பொருந்திய சர்க்காராலே அந்த ஜாதிச் சண்டையைத் தடுக்க முடியவில்லை தேசிய கீதம்பாடி இந்த சாதாரண ஜாதிச் சண்டையிலே இதுவரையிலே பத்திரிகைக் கணக்குப்படி 40 பேருக்கு ஏறக்குறைய செத்திருக்கின்ருர்கள்; கலகம் தொடர்ந்து நடைபெறுகிறதென்று படிக்கின்ரேம், ஏன் இதை நான் சொல்லுகின்றேனென்ருல், அப்படிப்பட்ட சில வேலைகளில் வெறித்தனத்தோடு தாக்கக்கூடியதான ஒரு காட்டுமிராண்டித்தனமான ஒரு முறை நாட்டிலே அமுலிலே இன்றையத்தினம் இருந்து வருகின்றது. இவர்களை எதிர்த்து ஒரு நல்ல அறப் போராட்டக் கிளர்ச்சியை நடத்துவதென்ருல் எல்லாவிதமான தியாகங்களுக்கும் நாம் உட்பட்டிருக்க வேண்டும்.

"என்னுடைய நண்பர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பாடிய பாட்டில், கடைசி அடியை மறுபடியும் உங்களுக்கு நான் கவனப்படுத்துவேன். 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—நம்மை மாட்டநினைக்கும் சிறைச்சாலை' என்று அவர்கள் பாடினுர்களே, 1937-ல் ஒவ்வொரு சிறைச்சாலையிலும், ஒவ்வொரு கம்பிக்குப்பின்னுலேயும் ஒவ்வொரு வார்டர்கள் காதிலேயும், ஒவ்வொரு சாதாரணக் கைதியினுடைய காதிலேயும் கேட்டுக் கொண்டிருந்த எழுச்சி மிக்கப் பாடல்தான் அது. அப்படிப்பட்ட விதத்திலே 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—நம்மை மாட்டநினைக்கின்ற சிறைச்சாலையைப் பற்றி எண்ணத்தக்க உள்ளம் படைத்தால்மட்டும் போதாது, அப்பொழுதிருந்த ஆட்சியைவிட இப்பொழுதிருக்கிற ஆட்சியாளர்கள் அடிப்பதற்கு அஞ்சமாட்டார்கள்; சுட்டுக் கொல்வதற்குத் தயங்கமாட்டார்கள்.

"நீங்கள் பத்திரிகை பார்த்தால் தெரியும்—துப்பாக்கிக் குண்டுபட்டு இறந்துவிட்டவர்களின் விசாரணையில், ஒரு அதிகாரி விசாரிக்கிருர், போலீஸ் அதிகாரியை, 'ஆகாயத்தை நோக்கி சுடவில்லையா' என்று. அதற்கு அந்த போலீஸ் அதிகாரி பதில் சொன்னது பத்திரிகையிலே இருக்கின்றது.

"'இல்லை, நாங்கள் ஆகாயத்தை நோக்கிச் சுடவில்லை.'

"'ஏன்?'

"'எங்களுக்கு அப்படி உத்தரவு இல்லை.'

"'உங்களுக்கு என்ன உத்தரவு?'

"'சாகடிப்பதற்காகச் சுடு. (Shoot to kill')

"வெள்ளைக்காரன் காலத்தில் 'மிரட்டுவதற்காகச் சுடு (Shoot to Care') மேலே சுட்டால் வெற்றுதோட்டா வெடிக்கும், மக்கள் மிரண்டு ஓடுவார்கள். இவர்கள் காலத்திலே, 'Shoot to kill—கொல்வதற்காகச் சுடு' என்பதுதான் எங்களுக்கு உத்தரவுஎன்றதாகபத்திரிகையிலே படித்தேன், போலீஸ் அதிகாரி சாட்சியமளித்திருக்கின்ருர். அப்படிப்பட்ட ஈவுஇரக்கமற்ற நிலைமை நாட்டிலே இருக்கிற காரணத்தால், இந்தி எதிர்ப்பு இயக்கத்தை திறம்பட நடத்துகின்ற அறப்போராட்டம் உருவாகின்ற நேரத்தில், அருணகிரி அடிகள் அவர்களும், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் மற்றும் பல நண்பர்களுடன் சார்ந்து பேசி ஒரு நல்ல திட்டத்தைத் தீட்டுகின்ற நேரத்தில், நீங்கள் எதற்கும் தயாராக இருக்கக்கூடிய நல்ல உள்ளத்தைத் தாங்கி, ஒரு துளியும் பலாத்காரத்திலே நம்பிக்கை வைக்காமல், ஒரு துளியும் கடமையுணர்ச்சியிலே இருந்து தவருமல், ஒரு துளியும் கண்ணியத்தைக் கெடுத்துக்கொள்ளாமல்—கட்டுப்பாட்டை மீருமல் இந்தப் போராட்டத்திலே ஈடுபடமுடியும் என்ற துணிவு இருக்கின்றவர்கள் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இடத்திலே நாளையத் தினம் முதற்கொண்டே பெயர்களைக் கொடுங்கள்.

"பட்டியல் வளரட்டும்; திட்டங்கள் வளரும். பட்டியல் வளர வளர, வடநாட்டான் அந்தப் பட்டியலைப் படித்துப் பார்க்க பார்க்க 'தி. மு. கழகம் இந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்தைத் தலைமைதாங்கி நடத்தப்போகின்றது' என்ற செய்தி கேள்விப்பட கேள்விப்பட, இந்தி எதிர்ப்பு இயக்கம் இதற்கு முன்னுலே என்னென்ன போராட்டம் நடத்திற்று என்பதையெல்லாம் படித்துப் பார்த்து, 'ஒரு நாள் இரயில் நிற்கவேண்டும்' என்று சொன்னவுடனே, '5,000 தோழர்களுக்கு மேல் சிறைச்சாலைக்குச் சென்ருர்கள்' என்ற நம்முடைய வீர வரலாற்றை—துப்பாக்கிக் குண்டைக்காட்டி 'அதோ போகிருன் கருணுநிதி, சுடு!'—'இதோ பார் கண்ணதாசன் அடி!' என்று சொன்ன நேரத்திலேயும் கலங்காமல் நின்றவர்கள் நம்முடைய இயக்கத்திலே 'ஏராளமாக இருக்கின்ருர்கள்' என்ற வரலாற்று உண்மையை அறிந்திருக்கின்றவர்கள் இந்தப் பட்டியல் வளர்ந்தால், நான் உங்களுக்குத் தெளிவாகச் சொல்லுவேன்—எவ்வளவுதான் வீரதீரமாக அவர்கள் பேசினுலும் கீழே இறங்கி வரத்தான் செய்வார்கள்.

"ஆகையினுலே நமக்குள்ளே அந்தக் கட்டுப்பாடுணர்ச்சி வளருவதற்கும், வீர உணர்ச்சியை நாம் பெறுவதற்கும் இன்றைய மாநாடு பயன்பட வேண்டுமென்பதற்காகத்தான் இந்தி எதிர்ப்பு மாநாட்டை, இங்கே நண்பர்கள் கூட்டியிருக்கின்ருர்கள்.

"மாநில மாநாட்டில் எடுத்த பல முடிவுகளை தொடர்ச்சியாக நிறைவேற்றிக்கொண்டு வருகின்ரேம். அதிலேயும் இந்தியைப் பற்றி நாம் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்ரேம். அந்த நேரத்திலே ஏற்படாத ஓர் சூழ்நிலை இன்றையத்தினம் ஏற்பட்டிருக்கின்றது. அது என்ன சூழ்நிலையென்ருல், கேர் என்ற ஒரு காங்கிரஸ் தலைவரை வைத்து, வேறு பல காங்கிரஸ் தலைவர்களையும் அவருக்குத் துணையாக வைத்து இந்தி வேண்டுமா? வேண்டாமா? இந்தியை எப்படிப் புகுத்துவது? 1960-க்குள்ளே இந்தியை எப்படித் திணிப்பதென்பதற்கு வழிவகை கண்டுபிடித்தார்கள்; அந்த வழிவகை கண்டுபிடித்த—அவர்கள் வெளியிட்ட அந்த அறிக்கையை அந்தக் கமிட்டியிலேயே உறுப்பினராக இருந்த டாக்டர் சுப்பராயன் அவர்கள், 'எனக்கு அது பிடித்தமில்லை' என்று அவர்களே அந்த அறிக்கையில் குறிப்புத் தந்திருக்கின்ருர்கள்; அவர் சொன்ன இரண்டு வாசகங்களை மட்டும் படிக்கின்றேன். டாக்டர் சுப்பராயன் என்பதற்காக மட்டுமல்ல; டாக்டர் சுப்பராயன் பெருந்த அறிவாளி—நல்ல அனுபவசாலி; அவைகளுக்காக மட்டும் நான் படிக்கவில்லை; அவர் இன்றையத் தினமும் காங்கிரஸ் உறுப்பினராகத்தான் டில்லிப் பாராளு மன்றத்திலே இருக்கிருர்; அவர் கேர் கமிட்டி அறிக்கையைப் பற்றி தருகின்ற வாக்கியம்:—

I fear that the entire report there is very little evidence of understanding, imagination and sympathy for the non-Hindi speaking peopleof India!

"நான் கேர் அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். இந்தி பேசாத மக்களுடைய மனப்பான்மையை அறிந்துகொள்வதற்கு — அவர்களுடைய நோக்கத்தை அறிந்துகொள்வதற்கு — அவர்களுடைய எண்ணத்தைப் புரிந்துகொள்வதற்கில்லை" — என்று அதிலே குறிப்பிட்டிருக்கின்ருர். இப்பொழுது நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தி மொழியை இங்கே புகுத்த வேண்டுமென்ருல், இந்தி மொழி யார் யார் பேசுகிருர்களோ அவர்களைக் கேட்டுப் பயனில்லை."

(தொடரும்)

## கோவை நகர வாக்காளர் பட்டியல்

### கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

கோவை நகருக்கான திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் கோவை நகரில் ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள நகராட்சிப் பள்ளிகளிலும் மற்றும் நகராட்சி மன்றத்திலும் 8-10-57 வரை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. அந்தந்த வட்டாரக் கழகத் தோழர்கள் அவைகளைபார்வையிட்டு மேற்கண்ட பட்டியலில் பெயர் இல்லாமலிருக்கும் கழகத் தோழர்கள், பொதுமக்கள் இவர்களின் பெயரை பட்டியலில் சேர்க்கும்படி, நகராட்சி மன்ற ஆணையாளருக்கு 8—10—57-ந்தேதிக்குள் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுகிரேம்.

### தாலுகா வாக்காளர் பட்டியல்

மேனூர் பஞ்சாயத்துகளில் பஞ்சாயத்து போர்டு அலுவலகத்திலும் இதர கிராமங்களில் கிராம அதிகாரிகள் வசமும் 8—10—57 வரை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. பட்டியலில் பெயர் இல்லாமல் இருக்கும் கழகத் தோழர்களும் பொதுமக்களும் 8—10—57-ந் தேதிக்குள் கோவை தாசில்தாருக்கு தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுகிரேம்."

என, கோவை நகர தி. மு. க செயலாளர் தோழர் சே. அ. இராசமாணிக்கம் அறிவிக்கிருர்.

## நாஞ்சில் மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு:

"நமது மாவட்ட மாநாட்டினை டிசம்பர் திங்களில் கூட்டுவதற்குத் தலைமை நிலையம் அனுமதி தந்துவிட்டது. பல்லாற்ருலும் சிறப்பான முறையில் மாநாடு அமைந்திடல் வேண்டும் ஏன விழையும் கழகத் தோழர்களின் ஆர்வத்தை வெளிக்காட்ட—திறமையைப் பயன்படுத்த மாநாடு மகத்தான வாய்ப்பினை வழங்கவிருக்கிறது. நமது வரவேற்புக் குழுத் தீர்மானப்படி, குழு உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தொகை ரூ. 5. அக்டோபர் முதல் வாரத்திற்குள், கே. சுப்பிரமணியம், தெற்கு இரத வீதி, கோட்டாறு, நாகர்கோவில் என்ற முகவரிக்கு அனுப்பி, ரசீது பெற்றுக் கொள்ளவும். தோழர்கள் அனைவரும் இது விஷயத்தில் உற்சாகத்தோடு பணியாற்றக் கேட்டுக் கொள்ளுகிறேன்"

என, நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கி. மனோகரன் அறிவிக்கிருர்.

### நீக்கிய தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்க

சேலம், செப். 24—

சேலம் நகராண்மைக் கழக, நகரசுத்தி தொழிலாளர்கள் சங்கக் கூட்டம் பி. முத்துசாமி தலைமையில் நடைபெற்றபோது கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வில்லிபுத்தூர் நகராண்மைக் கழகத்தைச் சேர்ந்த 81 தொழிலாளர்களையும் சேலம் நகராண்மைக் கழகத்தைச் சேர்ந்த 3 தொழிலாளிகளையும் தற்காலீகமாக வேலையிலிருந்து நீக்கிவைத்திருப்பதை ரத்து செய்து அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள ஆவன செய்யவேண்டும் என சென்னை மாநில அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேறியது.

சுகாதார சிப்பந்திகள் சம்பந்தப்பட்ட குறைந்தபட்ச சம்பள நிர்ணயக் கமிட்டியின் சிபாரிசுகளை வெளியிடுமாறு சென்னை மாநில அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு மற்றொரு தீர்மானம் நிறைவேறியது. (ந—கி)

## சம்முவில் எண்ணை வயல்கள்

பெட்ரோலியம் வாசனையுடன் கூடிய எண்ணெய்க் கலப்பு கொண்ட மண், முராத்பூர் அருகே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். சாலையில் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளர்கள் இரண்டு இடங்களில் தோண்டியபோது இதைக் கண்டு பிடித்தனராம். தீக்குச்சியை கொளுத்தியபோது மண் தீப் பிடித்துக்கொண்டு எரிந்ததாம்.

எண்ணெய் வளமுள்ள 4 நீர் ஊற்றுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனவாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 9/57

## கே. வி. கே. சாமி நினைவு நாள்

திராவிட முன்னேற்றக் கழக முன்னணி வீரரும், செயற்குழு உறுப்பினரும், நெல்லை மாவட்டச் செயலாளரும், தொழிலாளர்த் தலைவருமாகிய தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து 20—9—57 அன்று ஓராண்டு நிறைவு பெறுகிறது. எனவே, நாடெங்கிலுமுள்ள தி. மு. கழகக் கிளைகள் அவரது நினைவு நாளாக 29—9—57 ஞாயிறு அன்று கொண்டாடுமாறு வேண்டிக்கேட்டுக்கொள்கிரேம்.

19—9—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர் தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# பொதுச்செயலாளர் முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கிறது. இந்த 42 சதவிகிதத்தினர் இந்தியை மட்டுமல்ல—இந்தி உருது, பஞ்சாபி—இவை அத்தனையையும் சேர்த்துப் பேசுபவர்களின் எண்ணிக்கைதான்—100-க்கு 42!

"இந்தி மட்டும் பேசுபவர்களிலேயே 11 வகை இந்தி பேசப்படுகிறது; இப்பொழுது புகுத்தப்படும் இந்தி 'மைதிலி' என்னும் ஒருவகையாகும். ஆகவே, 100-க்கு 58 பேர் இந்தியாவில் இந்தியல்லாத மொழி பேசுகின்றனர்.

"இன்றைக்குக் காங்கிரஸ்காரர்கள் உட்பட பலர் கூறுகிறார்கள்—'ஆங்கிலத்தைக் கைவிடக்கூடாது'—என்று! எந்தக் கோணத்தில் நாம் நின்று பார்த்தாலும் இந்தி நமக்குத் தேவையில்லை.

"தமிழ் நாட்டில் சாதாரணமாகக் கர்ணம் முதல் கவர்னர் வரை தமிழிலேயே பேசலாம்—எழுதலாம்—நிர்வாகம் நடத்தலாம்; ஆனால், காமராசர் வடநாட்டோடு, மற்றும் பர்மா, இலங்கை முதலிய வெளிநாடுகளோடு தொடர்புகொள்ளத் தமிழ் போதாது. வெளிநாடுகளோடு தொடர்புகொள்ள இந்தி போதுமென்றால் இந்தி போதாது—ஆங்கிலம்தான் தேவை.

"வளர்ந்த அரசியல்வாதிகளும், வளர்ந்த பெரும் வணிகர்களும்தான் அகில உலகோடு தொடர்பு கொள்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கட்டாயம் ஆங்கிலம் கற்றிருக்க வேண்டும்—கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

"வடநாட்டாரும் தமிழரும் தொடர்புகொள்ளும் அவசியம் ஏற்பட்டால் ஆங்கிலத்திலேயே பேசிக்கொள்ளலாம்.

"ஆங்கிலம் அன்னிய மொழி என்கிறார்கள்; இந்தியாவில் இலட்சக்கணக்கான ஆங்கிலோ—இந்தியர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் தாய்மொழி என்ன என்றால், ஆங்கிலம் என்கிறார்கள்—அவர்களுடைய தாய்மொழி ஆங்கிலம்; அப்படியானால், ஆங்கிலமும் இந்திய மொழிகளில் ஒன்றாகத்தானே ஆகவேண்டும்?

"ஆங்கிலம் 200 ஆண்டுகளுக்கு முன்புதான் இந்தியாவுக்கு வந்தது என்கிறார்கள். முதல் முதல் இந்தியாவில் நுழைந்த மொழி பிராகிருதம்; அடுத்தபடி நுழைந்த மொழி சமஸ்கிருதம்; அடுத்து மங்கோலியம், பாரசீகம், அராபியம்; அதற்குப் பிறகு நுழைந்த மொழி ஆங்கிலம்.

"பாரசீக மொழியோடு சேர்ந்த இந்தி, உருது மொழிகளெல்லாம் இந்த நாட்டு மொழிகளாக இருக்கும்போது—வந்த பிராகிருதம் இந்த நாட்டு மொழியாக இருக்கும்போது—செத்த மொழியாக இருக்கின்ற சமஸ்கிருதம் இந்த நாட்டு மொழியாக இருக்கும்போது, கொஞ்சம் பின்னாலே வந்து, இங்கு கொஞ்சம் பேருக்குத் தாய்மொழியாக இருக்கும் ஆங்கில மொழி ஏன் இந்த நாட்டு மொழியாக இல்லாமல் போய்விடும்?

"14 மொழிகள் இந்தியாவின் தேசிய மொழிகளாக இருக்கும்போது, 15-வது மொழியாக ஆங்கிலம் ஏன் இருக்கக்கூடாது? இதை நாம்கூட அல்ல—இராசகோபாலாச்சாரியாரே இந்த வாதத்தை எடுத்து வைத்துக்கொண்டுதான், 'ஆங்கிலம் இந்தியாவின் தேசிய மொழிதான்; இந்தி நமக்கு அவசியமில்லை; அது பொது மொழியாகத் தகுதியில்லை; ஆங்கிலம் நமக்குப் போதும்' என்றார்; 'ஆங்கிலம் அரசியல் மொழியாகலாம்' என்றார்.

(தொடரும்)

## 'சட்டம் பயன்படாது!'

### பிச்சைக்காரர்களுக்கு வாழ்வளிக்க திட்டம் வேண்டும்

### பம்பாய் முதலமைச்சர் கருத்து

பம்பாய், செப். 27—

"சட்டம் எவ்வளவு திறமையுடன் அமுல் செய்யப்பட்டாலும், நாட்டில் உள்ள பிச்சைக்காரர்கள் பிரச்சினையை தீர்க்க முடியாது; அதற்குத் தடுப்பு நடவடிக்கைகளும், வாழ்வளிக்கும் திட்டங்களும்தான் வேண்டும்"

என்று, பம்பாய் முதலமைச்சர் திரு. எஸ். பி. சாவன், சமூக தொண்டில் ஈடுபட்டுள்ளவர்கள் மாநாட்டில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

## மாப்பிள்ளைகள் 'மார்க்கெட்' பற்றி தேபர்

மைசூர், செப். 27—

'பெண்கள் தங்களது உதடுகளுக்குச் சாயம் பூசிக்கொள்வதை அறவே கைவிடவேண்டும். உதட்டுச் சாயம் இல்லாவிட்டால் வானம் இடிந்து விடாது. கல்யாண 'மார்க்கெட்'டில் மாப்பிள்ளைகள் கிடைக்காமல் போகவும் மாட்டார்கள்'

என்று காங்கிரஸ் தலைவர் தேபர் மைசூரில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

## பட்டாசு உற்பத்திசாலையில் தீ விபத்து

கோவில்பட்டி, செப். 27—

பட்டாசுகள் உற்பத்திக்கான கலவைகளைத் தயார் செய்து கொண்டிருக்கையில் தீ விபத்து ஏற்பட்டு, மூவர் மரணமடைந்து விட்டனராம். மற்றொருவர் நிலை கவலைக்கிடமாக உள்ளதாம். இந்த விபத்து பண்டமங்கலம் கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

## தண்ணீர் இறைக்க தடை: சர்க்கார் உத்தரவு

சென்னை, செப். 27—

மேட்டூர் வாய்க்கால் ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டுள்ள நிலங்களின் பாசனத்திற்காக நேரிடையாகத் தண்ணீர் இறைக்க அனுமதி பெற்றுள்ள குழாய்கள் உள்பட எல்லாக்குழாய்களும் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்று சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## ஆந்திராவில் காலரா

ஐதராபாத், செப். 27—

ஆந்திர மாநிலத்தில் பரவியுள்ள காலரா நோயின் காரணமாக மொத்தம் 496 பேர் மருத்துவ உதவி பெற்றனர் என்றும், அவர்களில் 207 பேர் மரணமடைந்து விட்டனர் என்றும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## வாணியம்பாடியில் துரித இரயில்கள் நிற்க கோரிக்கை

சேலம், செப். 24—

வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வாணியம்பாடியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நிறைய இருப்பதாலும், அங்கு மற்ற வியாபாரங்கள் அதிகம் நடைபெறுவதாலும் அங்குள்ள மக்களின் நலனை முன்னிட்டு நீலகிரி, மலபார் ஆகிய துரித (மெயில்) இரயில் வண்டிகளை வாணியம்பாடியில் நிறுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும்படி கோரி டெல்லி பாராளுமன்ற உறுப்பினர் கல்லாவி எ. துரைசாமி (கவுண்டர்) தென் பிராந்திய இரயில்வே ஜெனரல் மானேஜருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். (ந—நி)

## சேலம் நகர தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு:

30—9—57 இரவு 9 மணிக்கு சேலம் நகர தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; அவ்வமயம் 'அக்டோபர்—13 இந்தி எதிர்ப்பு நாளை நடத்துவது பற்றி ஆராயப்படும்.

## கழகக் கூட்டங்கள்

★

**நங்கவள்ளி:**
என். எஸ். கே. திடலில்
30—9—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: மு. அங்கப்பன்
பேசுபவர்:
என். எஸ். இளங்கோ

★

**தாராசுரம்:**
கடைவீதியருகில்
1—10—57 இரவு 8½ மணிக்கு
தலைவர்: எஸ். விசயராகவன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
கே. கே. நீலமேகம்
அன்பில்-தருமலிங்கம்
என். கிட்டப்பா

## ஈ. வெ. கி. சம்பத்

நிகழ்ச்சிகள்:

அக். 1: கோட்டூர்
3: பெங்களூர்
4: காவேரிப்பட்டணம்
5: ஆத்தூர்
(அண்ணா அவர்களுடன்)
14: வேட்டைக்காரன்புதூர்
15: சென்னிமலை
16: கோபிச்செட்டிப்பாளையம்
17, 18: ஈரோடு-தொகுதி
19: பேளுகுறிச்சி
20: சேலம்

## தூத்துக்குடிக்கு பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் வருகை

### நகராட்சி மன்றம் வரவேற்கும்

தூத்துக்குடிக்கு வருகைதரவிருக்கும் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு தூத்துக்குடி நகர மன்றத்தின் சார்பில் வரவேற்பு அளிக்க வேண்டும் என்ற தீர்மானம் 26-9-57-ல் நடந்த நகரமன்றக் கூட்டத்தில் நகர மன்ற உறுப்பினரும், தி. மு. கழக உறுப்பினருமான தோழர் அய்யாசாமி அவர்களால் முன்மொழியப்பட்டு, தோழர் இராமலிங்கம் அவர்களால் வழிமொழியப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. 30—9—57 காலை இவ்வரவேற்பு அளிக்கப்படும்.

## கலைவாணர் நடிப்பு பயிற்சி மன்றத் துவக்கவிழா

30—9—57 இரவு 7 மணிக்கு சென்னை, கோடம்பாக்கம் பஸ் நிலையம் அருகிலுள்ள சிங்காரகிராமணி திடலில், கலைவாணர் என். எஸ். கே. பயிற்சி மன்றத் துவக்கவிழா தோழர் என். எஸ். நாராயணன் தலைமையில் நடைபெறும்; தோழர் கே. ஏ. தங்கவேலு மன்றத்தைத் திறந்துவைப்பார். தோழர்கள் டி. கே. சண்முகம், கே. சாரங்கபாணி, டி. வி. நாராயணசாமி, என். என். கண்ணப்பா, பி. டி. சம்பந்தம், டி. என். சிவதாணு, எம். கே. முஸ்தபா, பிரண்டு இராமசாமி, வி.எம். ஏழுமலை மற்றும பலர் கலந்துகொள்வார்கள்.

## திரு. வி. க. மன்றப் பணிமனைத் திறப்பு விழா

29—9—57 காலை 10-30 மணிக்கு, சென்னை 47-வது வட்டம் திரு. வி. க. மன்றப் பணிமனைத் திறப்புவிழா தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில் நடைபெறும். தோழர் கோ செங்குட்டுவன் மன்றத்தைத் திறந்துவைப்பார். (இடம்:— வெங்கடநாராயணசாலை) தோழர் பெ. குமாரசாமி கொடியேற்றுவார். தோழர் எம். தம்பு இனிப்பு வழங்குவார். தோழர் எம். நாராயணகுருப் கஞ்சி வார்ப்பார். தோழர்கள் ஏ. எஸ். ஜேசுபாதம், ஊ. து. மதனன், இரா. சடகோபன், மற்றும் பலர் பேசுவர்.

# கே. வி. கே. சாமி நினைவுநாள் கூட்டங்கள்

★

## சென்னையில்

**கோடம்பாக்கம்:**

29—9—57 காலை 10 மணிக்கு சென்னை—கோடம்பாக்கம் ஆற்காட்டுச் சாலையிலுள்ள தி. மு. க. பணிமனையில், தோழர் அ. நட்சிவவர்மன் தலைமையில் கே. வி. கே. சாமி நினைவு நாள் கொண்டாடப்படும். தோழர்கள் ஏ. எஸ். இராமன், மா. செங்குட்டுவன், சோ. கிருட்டிணமூர்த்தி மற்றும் பலர் பேசுவர்.

**பெரியமெட்டு:**

29—9—57 காலை 8 மணியளவில் சென்னை—பெரியமெட்டு (26-வது வட்டம்) தி. மு.க. கிளையின் சார்பில், 12, சிங்கர் வீதியிலுள்ள கழகப் பணிமனையில், கே. வி. கே. சாமி நினைவு நாள் கொண்டாடப்படும். தோழர் ச. கன்னியப்பன் தலைமையில் தோழர்கள் ஆ. வீரன், சு. நல்லதம்பி, மு. கன்னியப்பன் ஆகியோர் பேசுவர்.

**14-வது வட்டம்:**

29—9—57 காலை 9 மணியளவில் பாரிஸ் வெங்கடாசலய்யர் தெரு, 18 எண்ணுள்ள 14-வது வட்ட தி. மு. க. பணிமனையில், கே. வி. கே. சாமி நினைவு நாள் கொண்டாடப்படும். சேலம்-சீனிவாசன் இரங்கற்பண்கள் பாடுவார். தோழர்கள் பலர் பேசுவர்.

**மயிலை:**

29—9—57 காலை 9 மணிக்கு சென்னை—மயிலை மாதாகோயில் தெரு, 11 எண்ணுள்ள 45-வது வட்ட தி. மு. க. பணிமனையில் 45-வது வட்ட கிளையின் சார்பிலும், மற்றும் சார்பு மன்றங்களாகிய அண்ணா படிப்பகம், இளைஞர் முன்னேற்றக் கழகம், சிந்தனையாளர் கழகம் ஆகியவை சார்பிலும் கே. வி. கே. சாமி நினைவு நாள் கொண்டாடப்படும். தோழர் அ. த. அரசு தலைமை வகிப்பார்; தோழர் பி. எஸ் இளங்கோ கே. வி. கே. சாமி உருவப்படத்தைத் திறந்துவைப்பார். தோழர் சுரதா கே.வி.கே. சாமி வரலாற்றைக் கவிதை நடையில் விளக்குவார்.

**சேப்பாக்கம்:**

29—9—57 காலை 9-மணிக்கு சென்னை-சேப்பாக்கம் (40-வது வட்டம்) தி. மு. க. பணிமனையில் (75, சி. என். கிருட்டினசாமி சாலை) கே. வி. கே. சாமி நினைவு நாள் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

**இராயபுரம்:**

29—9—57 காலை 10 மணியளவில் சென்னை 2-வது வட்டம் தி. மு. க. பணிமனையில் தோழர் சி. ஆர். அருச்சுனன் தலைமையில் கே. வி. கே. சாமி நினைவுநாள் கொண்டாடப்படும். தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

29—9—57 காலை 10-மணிக்கு இராயபுரம் தம்புசெட்டி சந்தில் உள்ள மக்கள் முன்னேற்ற மன்றப் பணிமனையில் திராவிட நாடு பிரிவினை வார விழாவும், கே. வி. கே. சாமி நினைவு நாளும் கொண்டாடப்படும். தலைவர்: ஏ. தேவராசன்; கொடியேற்றுபவர்: மு. சண்முகம்; பேசுவோர்: நடேசன், வி. டி. அரசு.

* * *

29-9-57 பிற்பகல் 2 மணிக்கு, இராயபுரம் கிழக்கு மாதாகோவில் தெரு, 73-பி எண்ணுள்ள சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றப் பணிமனையில் தோழர் கு. அன்பரசு தலைமையில் கே. வி. கே. சாமி நினைவு நாள் கொண்டாடப்படும். தோழர்கள் அன்புரோசு, ச. மாறன் ஆகியோர் பேசுவர்.

**11-வது வட்டம்:**

29—9—57 காலை 10-மணிக்கு சென்னை-பிராட்வே தெருவிலுள்ள தி.மு.கழகப் பணிமனையில் தோழர் கா. நா. வேலாயுதம் தலைமையில் கே. வி. கே. சாமி நினைவுநாள் கூட்டம்நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

**சைதாப்பேட்டை:**

29—9—57 மாலை 6½ மணிக்கு, சென்னை—சைதாப்பேட்டை சுப்பிரமணியர்கோவில் தோடி அருகில் தோழர் ம. அ. பொன்னுசாமி தலைமையில், கே. வி. கே. சாமி நினைவு நாள் கொண்டாடப்படும். தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன், எம். கருணாகரன், கே. முருகேசன் ஆகியோர் பேசுவர்.

**பெத்துநாய்க்கன்பேட்டை:**

29—9—57 காலை 9 மணிக்கு, சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றத்தில் (17, திருப்பள்ளித்தெரு) தோழர் தொ. லோ. கந்தசாமி தலைமையில் கே. வி. கே. சாமி நினைவு நாள் கொண்டாடப்படும். தோழர்கள் எஸ். சோமசுந்தரம். தி. அ. இராசேந்திரன், அ. ந. சக்கரபாணி ஆகியோர் பேசுவர்.

**தியாகராயநகர்:**

28—9—57 இரவு 8 மணியளவில் தியாகராயநகர் மதிவாணர் மன்றத்தில் (47-வது வட்டம்) தோழர் எம். எஸ். நம்பி தலைமையில் கே. வி. கே. சாமி நினைவு நாள் கொண்டாடப்படும். கழகத் தோழர்கள் பலர் பேசுவர்.

**திருவொற்றியூர்-தாங்கல்:**

29-9-57 பகல் 2 மணிக்கு, கே. வி. கே. சாமி நினைவுநாளை முன்னிட்டு திருவொற்றியூர்-தாங்கல், கே. வி. கே. சாமி நினைவு மன்றத்தில் காலை 7 மணியளவில் ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்தலும், பிற்பகல் 2 மணிக்கு டேப்-இராதாமாணிக்கம் குழுவினரின் இன்னிசையும் நடைபெறும்.

★

**கோதைமங்கலம் (பழனி வட்டம்)**

29—9—57 மாலை 6 மணிக்கு, கோதைமங்கலம் கலைவாணர் திடலில் தோழர் சீ. சு. வீ. கந்தசாமி தலைமையில் கே. வி. கே. சாமி நினைவு நாள் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் கா. வெங்கடாசலம், சண்முகம், சக்கேந்திரன் முதலியோர் பேசுவர்.

**மேட்டுப்பாளையம்:**

29—9—57 மாலை 6 மணிக்கு, மேட்டுப்பாளையம் அன்னபூரணி திடலில் தோழர் கா. அமீது தலைமையில் கே. வி. கே. சாமி நினைவு நாள் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் வி. சண்முகநாதன், மே. அ. கோதண்டராமன், தூயமணி ஆகியோர் பேசுவர்.

**திருமங்கலம்:**

29—9—57 காலை 10 மணிக்கு, திருமங்கலம் பெரியகடை வீதியில தோழர் அமீர் பாச்சா தலைமையில் கலைவாணர் நினைவு மன்றத் திறப்பு விழாவும், கே. வி. கே. சாமி நினைவு நாளும் கொண்டாடப்படும். தோழா இரசாக் திறந்துவைப்பார்; தோழர்கள் அனிபா, க. ம. வ. நடராசன், செல்லம், வேலன், பிச்சை ஆகியோர் பேசுவர்.

## சென்னை—கோடம்பாக்கம் தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு:

29—9—57 காலை 9 மணிக்கு ஆற்காட்டுச் சாலையிலுள்ள கழகப் பணிமனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கழக வரவு-செலவு, கழக ஆக்க வேலைகள் ஆகியவை ஆய்வுக்கு வரும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.